# ஒரு இசைவு அணுகுமுறை

*சுவிசேஷத்தின் இசைவு என்பது மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷங்களின் கருத்துக்களை நாள் வரிசை முறையில் இடுவதற்கு முயற்சி செய்கின்றன. ஜான் கார்ட்டர் அவர்கள், "இசைவு என்பது சுவிசேஷங்களில் உள்ள விவரங்கள் நமது அறிவுக்கு எட்டிய வகையிலும் படிக்கப்பட்ட ஆய்வு முடிவுகளின்படியும் மிகச் சிறப்பாக அடுக்கப்பட்டு, இயேசுவின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகள் அவை நடந்த வரிசையின்படி தொகுக்கப்பட்டு, அவைகள் ஒன்றாகப் படிக்கப்படும்படி இணையாக வைக்கப்பட்டுள்ள பணியாக உள்ளது" என்று விளக்கப் படுத்தினார்.[1] "இசைவு" என்ற வார்த்தை ஆலோசனை தெரிவிக்கிறபடி, இது நான்கு சுவிசேஷ விவரங்களையும் இசைவிக்கச் செய்யப்படுகிற ஒரு முயற்சியாக உள்ளது.*

*இது ஒரு சுலபமான பணியல்ல. நான் இதை, 1950களில், J.W. இராபர்ட்ஸ் அவர்களால், போதிக்கப்பட்ட "கிறிஸ்துவின் வாழ்வு" என்ற கல்லூரிப் பாடத்தைப் படித்தபோது கற்றுக் கொண்டேன். ஒவ்வொரு மாணவருக்கும் புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களின் இரு பிரதிகள் வழங்கப்பட்டன, அத்துடன் இயேசுவின் வாழ்வு பற்றிய வேத வசன வரைக்குறிப்பு/இசைவுக் குறிப்பு தரப்பட்டது. எங்களுக்குத் தரப்பட்ட புத்தகங்களை சரியானபடி கத்தரித்து அந்தப் பிரிவுகளைத் தாள்களின்மீது ஒட்டி, எங்கள் சொந்த இசைவுக் குறிப்பைத் தயாரித்தல் என்பதே எங்களுக்குத் தரப்பட்ட பயிற்சியாக இருந்தது. வேத வசனத்தின் அந்தச் சின்னஞ்சிறு துணுக்குகளை வரிசைப் படுத்திக் காத்துக் கொள்ளுதல் என்பது என்ன ஒரு கடின பயிற்சியாக இருந்தது!*

*இயேசுவைப் பற்றிய ஒரு நாள் வரிசை முறையிலான வரலாற்றை உண்டாக்குவது என்பது ஏவுதல் பெற்ற எழுத்தாளர்களின் நோக்கமாக இருந்ததில்லை என்பதே, ஒரு இசைவுக்குறிப்பை கட்டியெழுப்புவதென்பது கடினமாயிருப்பதற்கான அடிப்படைக் காரணமாகும். இதற்கு மாறாக, இயேசு தேவனுடைய குமாரன் என்பதையும் இரட்சிப்புக்கு அவர் மட்டுமே ஒரே நம்பிக்கையாக இருக்கின்றார் என்பதையும் வாசகர்கள் நம்பி ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும் என்பதே இயேசுவின் வாழ்வு பற்றிய பாடக்கருத்துக்களை அவர்கள் அமைத்ததன் நோக்கமாக இருந்தது.[2]*

*கிறிஸ்துவின் வாழ்வில் பல பிரிவுகள் தெளிவானவைகளாக இருக்கின்றன: அவரது பிறப்பும் தொடக்க கால வாழ்வும், அவரது ஊழியம், அவரது மரணத்தில் உச்சக்காட்சியை அடைந்த எருசலேமில் கடைசி வாரம், மற்றும் அவரது உயிர்த்தெழுதலும், பரத்துக்கேறுதலும். ஆயினும் இந்தப் பிரிவுகளுக்குள்ளாக நாம் நிகழ்வுகளின் வரிசை பற்றி எப்போதுமே நிச்சயமாய்க் கூற இயலாது. விசேஷமாக, "அவரது ஊழியத்தின்" அகன்ற*

பிரிவுக்குள் இது உண்மையாக உள்ளது.

ஒரு சுவிசேஷத்தில் உள்ள ஒரு விவரமானது இன்னொரு சுவிசேஷத்தில் உள்ள அதே விவரமா அல்லது அதைப் போல இன்னொரு வேளையில் இன்னொரு இடத்தில் நடந்ததா என்பதை நாம் எப்போதுமே நிச்சயமாய்க் கூற இயலாது.[3]

ஒரு இசைவுக் குறிப்பைக் கட்டமைப்பதில் உள்ளடங்கியிருக்கிற சிரமங்களின் காரணமாக, இதைச் செய்ய முயற்சிக்கவும் கூடாது என்று சிலர் நினைக்கின்றார்கள். அந்த முடிவின்மீது கருத்து வேறுபடும் பல கல்வியாளர்கள், குறைந்தபட்சம் இரு காரணங்களுக்காக, சுவிசேஷ இசைவுக் குறிப்பில் மதிப்பைக் காண்கின்றார்கள். முதலாவது, ஒரு சுவிசேஷ விவரத்தில் உள்ள ஒரு பதிவானது அடிக்கடி, இன்னொரு சுவிசேஷ விவரத்தில் உள்ள பதிவை "இனிதே ஈர்த்து" விவரங்களைக் கூட்டுகிறது. இரண்டாவது, நான்கு பதிவுகளையும் தொகுத்தல் என்பது நமக்கு வேறு எவ்வழியிலும் பெற முடியாத வகையில் இயேசுவைப் பற்றிய தெளிவான தோற்றத்தைத் தருகிறது. F. லாகார்டு ஸ்மித் அவர்கள், ''ஒவ்வொரு தனிப்பட்ட நிகழ்ச்சியும் தனது சந்தர்ப்பப் பொருளுக்குள்ளா கவே, அதன் புதிய கருத்துணர்வு மற்றும் அந்த நிகழ்ச்சியின் தனிச்சிறப்பினுடைய கூடுதல் மதிப்பு ஆகியவற்றினால் ... நான்கு தனித்தனி விவரங் களையும் தொகுக்க முயற்சிப்பதில் இழந்து போகப்படக் கூடிய எந்த ஒரு தனி தோற்றக் காட்சியும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது'' என்று எடுத்துரைத்தார்.[4] A. T. இராபர்ட்ஸ்ன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இசைவுக் குறிப்பு என்பது ... இயேசுவின் வாழ்வை மனப்பூர்வமாய் படிப்பதற்கு இன்றியமையாத ஒரு புத்தகமாக உள்ளது ... இசைவுக் குறிப்பை ஒருக்காலும் வாசித்திராதவர், இயேசு கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய இணை மற்றும் வளர்நிலைப் பதிவேடுகளில் இருந்து பாய்ந்தோடி வருகிற ஒளி வெள்ளத்தினால் திகைப்பு அடைவார்.[5]

## முடிவுரை

நான் முன்பு ஒருமுறை, "நாம் ஒவ்வொருவரும் இன்னும் அதிகமாய் இயேசுவைப் போல் ஆவதே, சபையின் மாபெரும் தேவைகளில் ஒன்றாகும். அவரது வாழ்க்கையைப் பற்றிய இந்த ஓராண்டு படிப்பானது குறைந்தபட்சம் இதற்கு ஒரு தொடக்கமாக இருக்கிறது'' என்று எழுதியிருந்தேன். இந்தப் பாடத்தொடர், வேதாகம வகுப்புகளில் பல மாணவர்களுக்கும் ஆராதனை ஊழியங்களில் பிரசங்கத்தைக் கவனிக்கும் பலருக்கும் உதவியாயிருக்கும் என்று நான் நம்புகின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக, இது உங்களுடைய வாழ்வை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்.

டேவிட் ரோப்பர், இணை ஆசிரியர்,
*இன்றைக்கான சத்தியம்*

குறிப்புகள்

[1]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), vii. [2]*இந்த சத்தியம் பற்றி "நான்கு சுவிசேஷங்களின் விவரங்கள்" என்ற அடுத்த பாடத்தில் அதிகம் விவரமாக குறிப்பிடப்படுகிறது.* [3]விவரங்கள் எப்போதுமே ஒத்த விவரங்களாகப் பதிவு செய்யப்படுவதில்லை என்ற உண்மை இந்த அறைகூவலுடன் தொடர்புடையதாக உள்ளது. இந்தப் "பிரச்சனையானது" அடுத்த பாடமாகிய "நான்கு சுவிசேஷங்களின் விவரங்கள்" என்பதில் விரிவாக விவாதிக்கப்படுகிறது. [4]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1351. [5]A. T. Robertson, *A Harmony of the Gospels for Students of the Life of Christ* (New York: Harper & Row, 1950), viii.